# மெட்ரோ ரயில் நிலையங்களில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள்

## 16-ம் தேதி தொடக்கம்

சென்னை

மெட்ரோ ரயில் நிலையங்களில் வரும் 16-ம் தேதி முதல் ஆகஸ்ட் 13-ம் தேதி வரையில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகள் உடல், மனம், சிந்தனை, மொழி, கலாச்சாரம், பண்பாடு என ஏதேனும் ஒரு வகையில் நன்மை வழங்கக் கூடிய விளையாட்டாகவே இருந்து வந்தது. ஆனால், தற்போது கணினி, செல்போன் போன்ற தொழில்நுட்ப பயன்பாடு அதிகரித்து விட்டதால், பாரம்பரிய விளையாட்டுகளைப் படிப்படியாக மறந்து வருகிறோம்.

இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையங்களில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்த மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

அதன்படி, மெட்ரோ ரயில் நிலையங்களில் வரும் 16-ம் தேதி முதல் ஆகஸ்ட் 13-ம் தேதி வரையில் (ஜுலை 21, ஆகஸ்ட் 9 தவிர்த்து) பல்லாங்குழி, பரமபதம், ஆடுபுலி ஆட்டம், கட்டம் விளையாட்டு, நாலுகட்ட தாயம், தடி ஆட்டம் உட்பட பல்வேறு வகையான விளையாட்டு நிகழ்வுகள் நடக்கின்றன.

**மாலை 4 முதல் - 6 மணி வரை**

நந்தனம், அரும்பாக்கம், அசோக்நகர், திருமங்கலம், கீழ்பாக்கம், விமான நிலையம், பரங்கிமலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்ட்ரல், சைதாப்பேட்டை, அண்ணாநகர் டவர், ஆலந்தூர், டிஎம்எஸ், செனாய்நகர், நேரு பூங்கா, கோயம்பேடு, தேனாம்பேட்டை, எழும்பூர் மற்றும் மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையங்களில் மாலை 4 மணி முதல் 6 மணி வரையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்றன.

இதேபோல், கிண்டி, வடபழனி, சின்னமலை, நங்கநல்லூர் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும் போட்டிகள் நடக்கின்றன. இதில், மக்கள் பங்கேற்று விளையாடி மகிழலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.